**O.S.126/2020**

Date : 25.03.2025

வா.சா.2 : மாடசாமி

வா.சா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

முதல் விசாரணை தயார் செய்ததற்கு விவரம் சொன்னது என் மகள் ஆவார். அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கின் வாதி என் மகள் ஆவார். அவர் பெயர் சந்திர குமாரி என்பதாகும். ஆனால் நான் சந்தன குமாரி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சந்திர குமாரி ஆகும். எனக்கு ஐந்து குழந்தைகள் ஆவார்கள். 1. சூரிய குமாரி, 2. சந்திர குமாரி, 3. முத்து லெட்சுமி, 4. கரையடி மாடசாமி, 5. ராஜேஷ்வரி அதில் கடைசி இரண்டு பேர் இறந்து விட்டார்கள். வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு என் மகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். முதல் விசாரணையில் நான் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் என் மகள் கேட்டிருப்பதாக தாக்கல் செய்திருப்பது தவறு என்றும் அவர் அவ்வாறு ஒரு பரிகாரமே கேட்கப்படவில்லை என்றால் தெரியாது. எனது அப்பா பெயர் சுடலை முத்து என்பதாகும். தாத்தா பெயர் ராமன் என்பதாகும். வழக்கு சொத்தின் சர்வே எண்.168/8 என்பதாகும். 1 ஏக்கர் 48 செண்டு என் அப்பாவிற்கு பாத்தியம் என்று சொல்வதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் பட்டாவில் சுடலை முத்துவிற்கும், பார்வதி அம்மாளின் பெயர் உள்ளது. பட்டா எண்.96 ஆகும். என் அப்பாவிற்கு 1 ஏக்கர் 48 செண்டு தனித்து பாத்தியம் என்று சொல்வதற்கு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வாய் மொழி பாகம்தான். அவ்வாறு வாய் மொழி பாகம் இல்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாய் மொழி பாகத்தை நிரூபிக்க நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான். பட்ட எண்.96 கூட்டுப்பட்டாவாகத்தான் உள்ளது என்றும் என் அப்பாவிற்கு 1 ஏக்கர் 48 செண்டு என்று துலங்காது என்றால் சரிதான். கூட்டு பட்டாவாக உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் சுடலைமுத்து மகன் மாடசாமி, சூரிய குமாரி, சந்திர குமாரி மற்றும் முத்து செல்வி பெயர் உள்ளது என்றால் சரிதான். பிள்ளைகள் பெயர் எவ்வாறு வந்தது என்றால் நன்கொடை ஆவணமாகவும் மற்றும் வாய் மொழி பாகம் மூலம் பெயர் வந்தது. நன்கொடை கொடுத்ததாக என்னுடைய பிராதிலும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சந்திர குமாரியின் வயது 35 ஆகும். வழக்கு தாக்கல் செய்யும் போது வாதியின் வயது 28 என்று போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா 2003 வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படியென்றால் 2003 என் மகளுக்கு 13 வயது என்றால் சரிதான். மைனர் என்று பட்டாவில் சொல்லப்படவில்லை என்றால் அரசு கொடுத்தது அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பட்டா மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. பட்டாவில் 9 பேர் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ன் படி எனக்கு தபசில் சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 27.10.2011 ம் தேதியில் நான் என் மகளுக்கு ஒரு செட்டில்மெண்ட் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் 1 ஏக்கர் 48 செண்டாகும். நான் அந்த செட்டில்மெண்டை உரிமை இல்லாமல் மோசடியாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 48 செண்டு இடம் எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதற்கு எனக்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் என் மகளின் பெயர் சந்தன குமாரி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சந்திர குமாரி ஆகும். வா.சா.ஆ.1 குறித்து விஜயநாராயணம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை காப்பாற்ற வேண்டி என் மகள் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் சகோதர சகோதரிகள் தந்தை பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் மகள் பெயரில்தான் கூட்டு பட்டா உண்டு சகோதரிகள் பெயரில் கூட்டு பட்டா இல்லை. பிராது தபசில் சொத்தில் கிணறு இருப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் 8 ல் கிணறு இல்லை. என் அப்பாவும் பெரியசாமி கோனாரும் 1981 ல் ஒரு பரிவர்த்தனை செய்தார்கள் என்றால் இல்லை. என் அப்பாவும் பெரியசாமி கோனாரும் 1981 ல் ஒரு பரிவர்த்தனை செய்தார்கள் என்றும் அதில் 14 1/2 செண்டு மட்டுமே எனக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. 14 1/2 செண்டு மட்டுமே எனக்கு பாத்தியம் என்றும் 1 ஏக்கர் 48 செண்டு பாத்தியம் இல்லை என்றும் என் குடும்ப உறுப்பினர்களின் பங்கு விகிதாச்சாரபடி அதில் எனக்கு 3 செண்டுதான் கிடைக்கும் என்றால் சரியல்ல. சர்வே எண்.168 ல் நெல் பயிர் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.168 பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் தவறான பட்டா ஆகும். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன்

என்றால் சரியல்ல.  வழக்கு சொத்தில் எனக்கு எந்த விதமான அனுபவமும் உரிமையும் இல்லை என்றாலும் பிரதிவாதிக்குதான் உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. நான் என் மகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் படி தபசில் சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து என் அப்பாவிற்கு பூர்வீக சொத்து அல்ல என்றால் சரியல்ல. 1981ம் ஆண்டு பரிவர்த்தனை பத்திரத்தின் மூலம் மட்டுமே எனக்கு 14 1/2 செண்டு மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.